PDNL
PALAYAMKOTTAI DIOCESE NEWS LETTER

Vol.54 NOVEMBER 2026 No. 02



Happy Feast of Christ The King

ADMINISTRATOR SPEAKS

Dear Fathers, Sisters, Brothers, and Lay Faithful,

The Commemoration of All the Faithful Departed, popularly known as All Souls' Day, invites us to pause, remember, and pray for all those who have gone before us marked with the sign of faith. It is a special occasion when the Church, united in prayer, remembers our departed brothers and sisters and commends them to the loving mercy of God.

Death is an inevitable part of human life, yet for Christians, it is not the end of our journey. Our faith teaches us that life is changed, not ended, and that through the death and resurrection of Jesus Christ, we are given the hope of eternal life. As Jesus assures us, "I am the resurrection and the life. Those who believe in me, even though they die, will live" (John 11:25). This promise gives us strength and consolation whenever we experience the pain of separation from our loved ones.

On this day, we remember with gratitude our parents, grandparents, relatives, friends, priests, religious, benefactors, and all those who have contributed to our lives and to the growth of our families and communities. Their sacrifices, love, guidance, and faith continue to inspire us. Though they are no longer physically present among us, their memories remain alive in our hearts.

The Church encourages us to offer prayers, Holy Masses, and works of charity for the faithful departed. Our prayers are expressions of love that transcend the boundaries of death.


They also remind us of the beautiful communion that exists among the Church on earth, the souls undergoing purification, and the saints who enjoy the fullness of God's presence.

All Souls' Day is also an invitation to examine our own lives. Remembering our mortality should not fill us with fear but encourage us to live meaningfully, forgive generously, love sincerely, and serve selflessly. Every day is an opportunity to prepare ourselves for the eternal home that God has promised us.

As we gather in our churches and cemeteries, let us entrust all our departed brothers and sisters to the infinite compassion of our Heavenly Father. May our remembrance become prayer, our grief become hope, and our love become a living testimony of our faith in the resurrection.

May the souls of all the faithful departed, through the mercy of God, rest in peace. Amen.

With prayers and blessings,



Rev. Fr. Motcharajan Michael
Diocesan Administrator
Diocese of Palayamkottai.

ADMINISTRATOR'S ENGAGEMENTS

November - 2026

Date	Time	Programme
12-11-2026		Monthly Recollection
22-11-2026	06:00 pm	Feast Mass, V.M.Chatram
24-11-2026	06:00 pm	Flag Hoisting, St. Xavier's, Cathedral, Palayamkottai
25-11-2026		Board Meeting, St. Paul's Seminary, Trichy
29-11-2026	10.00 pm	அன்பியக் கலைநிகழ்ச்சிகளின் இறுதிப்போட்டி, தேம்பாவணித் தோட்டம்

FROM DIOCESAN ADMINISTRATOR'S DESK

Announcements

Dear Brother Priests,

The monthly recollection for November will be held on 12th November at St. Antony's Diocesan Shrine, Sivalaperi Road, Palayamkottai. Kindly take note that the whole programme will be held there as per the schedule given below:

09.30 A.M : Registration

10.00 A.M : Adoration of BL. Sacrament and Confession

11.00 A.M : Information

Coffee Break

11.30 Noon : Requiem Mass & Blessing of the Cemeteries of the Clergy

01.00 P.M : Lunch

Fr. Motcharajan M.
Diocesan Administrator

BIRTHDAYS



01/11/	Fr. Aloysius Babu S. OCD
03/11/	Fr. I. Arockiaraj
05/11/	Fr. S. Francis Xavier
06/11/	Fr. C.P. Michaelraj
09/11/	Fr. P. Alphonse Paulraj
11/11/	Fr. K. Jacob Amala Preenith
14/11/	Fr. A. Arockiaraj
14/11/	Fr. F. Leo Jerold
15/11/	Fr. Joseph S. OFM (Cap)
15/11/	Fr. Adlin Joe G.M. OCD
16/11/	Fr. E. Xavier Sahaya Suresh
18/11/	Fr. D. Xavier Devasagayam
19/11/	Fr. Sesu Kumar C. O Praem
21/11/	Fr. Devanand A.Y. M.C.
21/11/	Fr. Michael Prakasam
27/11/	Fr. Jamels James

Dear Fathers, with great joy we wish you 'Happy Birthday'. May God shower His Grace upon you! MANY MORE HAPPY RETURNS OF THE DAY!

ORDINATION DAY



21 / 11 / 2021	Fr. Christhu Raja L.
25 / 11 /2006	Fr. Joe Sengole Raj Irudayaraj ISCH

Dear Fathers, we praise God for your Priesthood and your service to His people. May the Power of His Spirit guide you in your ministry and all through your life! HAPPY ORDINATION DAY.

FEAST DAYS

01/11/ All Saints Day

04/11/ Feast of St. Charles Borromeo

Fr. M. Charles

Sisters of Charles Borromeo, Puliyampatti

21/11/ Christ the King

Fr. Devarajan

Fr. M.P.Jesuraj

Fr. F.X. Rajesh

Dear Fathers and Sisters, we wish you "HAPPY FEAST"! We pray that your hearts be filled with His Love and Grace. May the Lord continue to bless you in your ministry through the intercession of your Patron Saints.

NECROLOGY

02/ 11 / 2011 All souls day

Dear fathers, brothers and sisters, we remember all our beloved ones who have gone before us to the Lord. May the Merciful God grant them Eternal Peace!



16 / 11 / 1991 Fr. A.S. Durairaj

23 / 11 / 1991 Fr. M. Susai Manickam

16 / 11 / 2001 Fr. Pascal D'Silva

17 / 11 / 2006 Fr. P. Gnanapragasam

May their souls Rest in Peace!

பொதுநிலையினர் பணிக்குழு

2026 - அக்டோபர் மாத பணியறிக்கை

'ஒலிவ நிழல்'

மூத்தவர் நலன் பேணுகிற சிறப்பு ஊழியமாகிய 'ஒலிவ நிழல்' அக்டோபர் மாதக் கூட்டம் **04.10.2026** ஞாயிற்றுக் கிழமை மாலை **4.00** மணிக்கு தேம்பாவணித் தோட்டம் யூபிலி மேய்ப்புப்பணி நிலையத்தில் நடைபெற்றது. சாந்திநகர் அமலவைக் கன்னியர் மடத்தின் தலைமை அருட்சகோதரி நீனா

தலைமை தாங்கி ஆசியுரை வழங்கினார். மகராஜநகர் பங்குப் பேரவைத் துணைத் தலைவரும் Mark Constructions உரிமையாளருமான திரு. ஜிம்மி கார்ட்டன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மூத்தவர் நலன் பேணுகிற சில குறிப்புகளைப் பகிர்ந்து கொண்டார். "இறைவாக்கு; என் ஒளிவிளக்கு" என்ற நிகழ்வில் திருமதி. வெலன்சியா சில்வேரா அவரை ஈர்த்த விவிலியப் பகுதியை அவருடைய வாழ்க்கை அனுபவத்துடன் குழைத்து மனமுருகப் பகிர்ந்தார். திரு. ஜோசப்ராஜ் "மனந்திறந்து மடைதிறந்து" என்ற நிகழ்வில் புனித பிரான்சிஸ் அசிசியாரின் வாழ்க்கையிலிருந்து சில அரிய நிகழ்வை அற்புதமாக விவரித்தார். 42 பேர் கலந்து கொண்டனர். கலந்து கொண்ட அனைவருக்கும் திரு. தாமஸ், திருமதி. ராணி தம்பதியர் தேநீர் வழங்கி உபசரித்தனர்.

"பொதுக்குழுக் கூட்டம்"

பொதுநிலையினர் பணிக்குழுவின் பொதுக்குழு 10.10.2026 சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு தேம்பாவணித் தோட்டம் யூபிலி மேய்ப்புப்பணி நிலையத்தில் கூட்டப்பட்டது. மறைமாவட்ட பரிபாலகர் பேரருட்திரு. M. மோட்சராஜன் தலைமை தாங்கினார். பணிக்குழுவின் மேனாள் செயலர் திரு. ஞான ஜெயமணி 'பொதுக் குழுவினருக்கு இறைவன் காட்டுகிற ஈடுபாடு' என்ற தலைப்பில் காணொளியில் காட்சிப்படுத்தி கருத்துரை வழங்கினார். அவரைத் தொடர்ந்து பல்சமய உரையாடல் பணிக்குழுவின் மேனாள் செயலர் திரு. மரிய மிக்கேல் 'வத்திக்கான் சங்கப்பார்வையில் பொதுநிலையினர்' என்ற தலைப்பில் கருத்துரை வழங்கினார். கடையம் பங்கைச் சார்ந்த திரு. சேவியர் ஆல்வின் விஜய் இணைச் செயலராகப் பணியாற்ற தாமாக முன்வந்தார். செயற்குழு உறுப்பினர்களாக மறைவட்டத்திற்கு இருவர் என மொத்தம் 10 பேர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். கூட்டத்தில் பணிக்குழுவில் கருத்தாளர்களாக பயிற்சி பெற்ற நால்வர் அறிமுகம் செய்யப்பட்டனர். அருளகம் பங்கு பொதுக்குழு உறுப்பினர் திரு. பீட்டர் ஆரோக்கியசாமி நன்றி கூறினார். மேற்கூறிய இரண்டு நிகழ்ச்சிகளையும் திருமதி. ஏஞ்சலா வியாகப்பன் தொகுத்து வழங்கினார்.



R. அந்தோனி வியாகப்பன்
செயலர்

2026 - அக்டோபர் மாத பணியறிக்கை

புதுவாழ்வு இயக்க 30 ஆம் ஆண்டு தொடக்க நாள் :

மாதத்தின் முதல் நாள் 01.10.26 வியாழக்கிழமை புதுவாழ்வு இயக்கத்தின் 30 ஆம் ஆண்டு தொடக்கத்தை முன்னிட்டு சிறப்பு பரிந்துரை செபமும், நன்றித் திருப்பலியும் புதுவாழ்வு தியான நிலையத்தில் நடைபெற்றது.

ஆசீர்வாத உபவாசக் கூடுகை

மாதத்தின் முதல் சனி (03.10.26)

சிவகிரி பங்கு உள்ளாறு, ஆசாரிப்பள்ளம், புனித அன்னாள் இல்லம்.

மாதத்தின் 2ம் சனி (10.10.26)

தென்காசி புனித மிக்கேல் அதிதூதர் திருத்தலம், அம்பை புனித சூசையப்பர் ஆலயம், இலுப்பையூரணி (கோவில்பட்டி) புனித அந்தோணியார் ஆலயம்.

மாதத்தின் 3ம் சனி (17.10.26)

இருதயநகர் (திருநெல்வேலி) திரு இருதய ஆண்டவர் ஆலயம் போன்ற பகுதிகளில் நடைபெற்றது.

விடுதலை திருவிழிப்பு செபம்

மாதத்தின் 2ம் சனி (10.10.26) புதுவாழ்வு தியான நிலையத்தில் இரவு திருவிழிப்பு செபம் நடைபெற்றது.

நற்செய்திக்கூடுகை

மூன்றாம் வெள்ளி (16.10.26) கோட்டாறு மறைமாவட்டம், குறும்பனையில் இரவு திருவிழிப்பு செபமும், 17.10.26 தக்கலை சங்கமத்தில் நற்செய்திக்

கூடுகை நடைபெற்றது. 17.10.26, 18.10.26 சனி, ஞாயிறு தூத்துக்குடி இன்னாசியார்புரத்தில் நற்செய்திக் கூடுகை நடைபெற்றது.

வாக்குத்தத்தம் தேர்வு

புதிய ஆண்டிற்கான வாக்குத்தத்தக் கூடுகை 20.10.26 செவ்வாய் கிழமை புதுவாழ்வு தியான நிலையத்தில் நடைபெற்றது.

முழுநேரப்பணியாளர்கள் கூடுகை

20.10.26, 21.10.26 செவ்வாய், புதன் புதுவாழ்வு தியான நிலையத்தில் நடைபெற்றது.

சிறப்பு உள்ளிருப்புத் தியானம்

இம்மாதத்திற்கான சிறப்பு உள்ளிருப்புத் தியானம் 22–25(வியாழன் – ஞாயிறு) தேதிகளில் சிறப்பாக நடைபெற்றது. அருட்பணி. பீற்றர் அமல்ராஜ், அருட்பணி. ஜோசப் (கோட்டாறு), அருட்பணி. ஹென்றி பிலிப் (கோட்டாறு), அருட்பணி. யூஜின்டோனி (கும்பகோணம்) மற்றும் புதுவாழ்வு இயக்கப் பணியாளர்களால் சிறப்பாக நடைபெற்றது. 150 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் கலந்து கொண்டன.

கூகுள்மீட் வழியாக செபம்

ஒவ்வொரு நாளும் இரவு 8 மணி முதல் 9 மணி வரை கூகுள்மீட் வழியாக 1300 நாட்களைக் கடந்து சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

தூய ஆவியில் புதுவாழ்வு மாதஇதழ்

சுமார் 2500 ற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு அஞ்சல் செய்யப்பட்டு நற்செய்திப்பணி நடைபெற்று வருகின்றது.

முழு நேர மற்றும் தன்னார்வப் பணியாளர்களால் வீடு சந்திப்புப் பணிகளும், செபக்குழு உருவாக்கம் நடத்துதல் போன்ற பணிகளும் நடைபெற்றது.

புதுவாழ்வு தியான நிலையத்தில் காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை நற்கருணை முன்பாக பரிந்துரை செபமும், தொலைபேசியில் வரும் செபக்கருத்துக்கு செபித்தும், ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. தியான நிலையத்தைத் தேடி வருகின்ற குடும்பங்களுக்கு ஆற்றுப்படுத்துதலும், விசுவாசத்தில் நிலைத்திருக்க செப உதவிகளும் வழங்கப்பட்டன.

இயேசுவுக்கே புகழ்! **இயேசுவுக்கே நன்றி!!**

கத்தோலிக்க நற்செய்திக் குழு

அக்டோபர் 02, 09, 16, 23 மற்றும் 30 வெள்ளிக்கிழமை குணமளிக்கும் சிறப்பு செப வழிபாடு தூய அந்தோணியார் மறைமாவட்ட திருத்தல மண்டபத்தில் வைத்து நடைபெற்றது. காலை 10.30 மணிக்கு ஆரம்பித்து மதியம் 01.30 மணி வரை நடைபெற்றது. நிறைவில் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது. ஏறக்குறைய 10 பேர் கலந்து பயன்பெற்றனர்.

அக்டோபர் 18, 19 மற்றும் 20 ஆகிய மூன்று தினங்களும் நல்லாயன் குடும்ப தியானம் – 2026 காலை 09.30 மணி முதல் மாலை 05.30 மணி வரை அன்னை தெரசா மண்டபம், தூய அந்தோணியார் மறைமாவட்ட திருத்தல வளாகத்தில் நடைபெற்றது. இதில் அருட்திரு. கிளாடிஸ் – கோவை, அருள்திரு. சகாயராஜ் cap – திண்டுக்கல், சகோ. கிரேஷியஸ் – தூத்துக்குடி, சகோ. T.V. அந்தோணி – சாலக்குடி ஆகியோர் இறைசெய்தி வழங்கினர். ஏறக்குறைய 200 பேர் கலந்து பயன்பெற்றனர்.

அக்டோபர் 31 சனிக்கிழமை இரவு 9.30 மணி முதல் மறுநாள் காலை 05.00 மணி வரை மறைமாவட்ட தூய அந்தோனியார் திருத்தல மண்டபத்தில் முழுஇரவு திருவிழிப்பு செபம் நடைபெற்றது. இதில் அருட்சகோ. இராஜன்

SHJ இறைபுகழ்ச்சி நடத்தினர். சகோ. ஜேம்ஸ் – தூத்துக்குடி இறைசெய்தி வழங்கினார். அருட்திரு. ஜெம்ஸ் திருப்பலி நிறைவேற்றினார். ஏறக்குறைய 120 பேர் கலந்து பயன்பெற்றனர்.

வாரம் ஒருமுறை 10க்கும் மேற்பட்ட கிராமங்களில் செபக்கூட்டம் நடைபெற்றது. தினமும் காலை 11.00 மணி முதல் மதியம் 01.00 மணி வரை கத்தோலிக்க நற்செய்திக்குழு அலுவலகத்தில் நாட்டிற்காகவும், திருச்சபைக்காகவும், மக்கள் தெரிவித்த செபக்கருத்துக்களுக்காகவும் செபிக்கப்பட்டது.

அருட்பணி. V.K.S. அருள்ராஜ்
செயலர்

அன்பியப் பணிக்குழு

அக்டோபர் மாத அறிக்கை

அன்பியங்கள் சந்திப்பு

அன்பியப் பணிக்குழு சார்பாக 10.10.2026 சனிக்கிழமை அன்று மாலை 6.30 மணியளவில் வெய்க்காலிப்பட்டி பங்குத்தளத்திலுள்ள 5 அன்பியக் குடும்பங்கள் சந்திக்கப்பட்டு, தொடர்ச்சியாக அன்பியக்கூட்டமும் நடத்தப்பட்டது. சில அன்பியங்களில் புதியப் பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இச்சந்திப்பில் பங்குத் தந்தை அருட்பணி. சாக்கோ வர்க்கீஸ் அவர்கள் உடனிருந்து மக்களைச் சந்தித்து ஊக்கப்படுத்தினார்கள்.

செயற்குழு கூட்டம்

மறைமாவட்ட அன்பியப் பணிக்குழுவின் செயற்குழு கூட்டம் செயலர் அருட்பணி. அ. பீற்றர் அவர்கள் தலைமையில் 11.10.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 4 மணியளவில் யூபிலி மேய்ப்புப்பணி நிலையம், தேம்பாவணித் தோட்டத்தில் வைத்து நடைபெற்றது. இக்கூட்டத்தில், நடைபெற இருக்கும் பேச்சுப் போட்டி,

மாநில அன்பியப் பணிக்குழுவின் வெள்ளி விழா நிகழ்வில் பங்கேற்பது மற்றும் மறைவட்ட அன்பியப் பொறுப்பாளர் பயிற்சிக் குறித்தும் பேசப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டன.

தயாரிப்புக் கூட்டம்

நவம்பர் மாதத்தில் 01, 15, 22, 29 ஆகிய நாட்களில் நடைபெற இருக்கும் பேச்சுப் போட்டிக்கான முன் தயாரிப்புக் கூட்டங்கள் செயலர் அருட்பணி. அ. பீற்றர் அவர்கள் தலைமையில் கீழ்க்கண்ட நாட்களில் நடைபெற்றன. இதில் மறைவட்ட அன்பியப் பொறுப்பாளர்கள் (ஆண் 1, பெண் 1, அருட்சகோதரி 1) கலந்து கொண்டனர்.

நாள் & நேரம்	**மறைவட்டம்**	**இடம்**
24.10.2026 10:00 AM	கோவில்பட்டி	புனித சூசையப்பர் ஆலயம், கோவில்பட்டி
24.10.2026 12:30 PM	சங்கரன்கோவில்	புனித சூசையப்பர் ஆலயம், சங்கரன்கோவில்
26.10.2026 06:30 PM	பாளையங்கோட்டை	யூபிலி மேய்ப்புப்பணி நிலையம், சாந்திநகர்
28.10.2026 03:30 PM	அம்பாசமுத்திரம்	அருளகம்
28.10.2026 05:30 PM	தென்காசி	புனித மிக்கேல் அதிதூதர் திருத்தலம், தென்காசி

அருட்பணி. அ. பீற்றர்
செயலர்

திருநெல்வேலி சமூக சேவை சங்கம், பாளையங்கோட்டை

அக்டோபர் - 2026 பணியறிக்கை

கோல்பிங் இந்தியா

✷ இம்மாதம் கயத்தார் - அமலி மற்றும் பாத்திமா குழுவிற்கு பொருளாதார கடனாக 10 நபருக்கு 30000 வீதம் ரூ.3,00,000 கடனாக வழங்கப்பட்டது.

சங்கமம் மற்றும் சிறுகடன் திட்டம்

✷ சங்கமம் தொடர்பாளர் கூட்டம் அனைத்து ஒன்றியங்களிலும் நடைபெற்றது. கணக்காளர்கள் கலந்துகொண்டு சேமிப்பு செலுத்திகடன் பெற்றுச் சென்றனர். சிறுகடன் திட்டத்தில் இம்மாதம் 22 குழுக்களைச் சார்ந்த 295 நபர்கள் பல்வேறு பொருளாதார செயல்பாடுகளுக்காக கடன் பெற்றனர் மேலும் தனிநபர் கடன் இம்மாதம் 239 பேருக்கு கொடுக்கப்பட்டது. மேலும் தணிக்கையானது 09.10.2026 குருவிகுளம் II, 10.10.2026 அகரகட்டு, 14.10.2026 பாளையங்கோட்டை, 22.10.2026 கடையம் I, 23.10.2026 கயத்தர் (மே), 24.10.2026 பாப்பாக்குடி, ஆகிய ஒன்றியத்திற்கும் தணிக்கை நடைபெற்றது. இதில் 255 குழுக்கள் கலந்து கொண்டனர்.

நெல்லைசங்கமம்

✷ நெல்லை சங்கம நிதி நிறுவனத்தில் இம்மாதம் 14 நபர்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

இதர செயல்பாடுகள்

✷ TASOSS மறைமாவட்ட இயக்குநர்களுக்கான கூட்டம் 07.10.2026 மற்றும் 08.10.2026 ஆகிய தேதிகளில் சென்னையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இயக்குநர் தந்தை அவர்கள் கலந்து கொண்டனர்.

✷ நெல்லை புற்றுநோய் மையத்தோடு இணைந்து மானூர் ஒன்றியம் தெற்குபட்டி கிராமத்தில் 26.10.2026 அன்று புற்றுநோய் விழிப்புணர்வு மற்றும் பரிசோதனை முகாம் நடைபெற்றது. இதில் 65 பேர் கலந்து கொண்டு பரிசோதனை மேற்கொண்டனர்.

அருட்திரு.S.பிரான்சிஸ் சேவியர்
இயக்குநர்

TSSS - சரணாலயம்

அக்டோபர் - 2026 பணியறிக்கை

1. **குழந்தைகள் வரவேற்பு பிரிவில்** புதிதாக 20 சிறுவர்கள், 11 சிறுமியர் என மொத்தம் 31 பேர் இல்லத்தில் புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ளனர். கல்வியைத் தொடர்வதற்காக 5 குழந்தைகள் பிற இல்லங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள். தற்போது 11 சிறுமியர், 05 சிறுவர்கள் என மொத்தம் 16 பேர் இல்லத்தில் உள்ளார்கள்.

2. **குழந்தைத் தத்து திட்டத்தில்** இம்மாதம் 1 ஆண், 1 பெண் குழந்தைகள் இல்லத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தற்போது இல்லத்தில் 4 ஆண், 7 பெண் குழந்தைகள் இல்லத்தில் பராமரிக்கப்படுகின்றனர்.

3. **திறந்த நிலைப் புகலிடத் திட்டத்தில்** புதிதாக 1 சிறுமி மட்டும் இல்லத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இம்மாதம் 18 கிராமங்களில் களப்பணி மேற்கொள்ளப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்போது 12 சிறுமியர், 9 சிறுவர்கள் என மொத்தம் 21 பேர் இல்லத்தில் உள்ளார்கள்.

<u>சிறப்பு நிகழ்வுகள்</u>

♦ 06.10.2026 அன்று குழந்தைத் தத்து திட்டத்தில் மாவட்ட அளவிலான ஆய்வு குழு உறுப்பினார்களால் இல்லம் ஆய்வு செய்யப்பட்டது. இதில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், குழந்தை நலக்குழு

உறுப்பினர், சுகாதார துறை அலுவலர் ஆகியோர்கள் கலந்து கொண்டு திட்ட ஆவணங்களை சரிபார்த்தனர்.

- 08.10.2026 அன்று நடைபெற்ற 33-ம் ஆண்டு இல்லவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. இதில் சிறப்பு விருந்தினராக பாளையங்கோட்டை மறைமாவட்ட பரிபாலகர் பேரருட்திரு.மோட்சராஜன், மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர், மாவட்ட நன்னடத்தை அலுவலர், மாவட்ட காவல் ஆய்வாளர், அருட்தந்தையர்கள் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கினார்கள். குழந்தைகளின் கலைநிகழ்ச்சிகள் சிறப்பாக அமைந்தது.
- 24.10.2026 அன்று தென்காசி குழந்தைகள் நலக்குழு தலைவர் மற்றும் உறுப்பினர்களால் இல்லம் ஆய்வு செய்யப்பட்டது.

அருட்திரு. அ. ஞானதினகரன்
இயக்குநர்.

கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு

2026 - அக்டோபர் மாத பணியறிக்கை

I. வினாத்தாள் தயாரிப்பு:

1 முதல் 8 முடிய உள்ள வகுப்புகளுக்கு மறைக்கல்வி, நல்லொழுக்கப் பாடங்களின் அரையாண்டு தேர்விற்கான வினாத்தாள்களும், 9 முதல் 12 முடிய உள்ள வகுப்புகளுக்கு ஆண்டு இறுதித் தேர்வு வினாத்தாள்களும் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

II. வினாடி வினா போட்டி:

மகாராஜநகர், கருத்தப்பிள்ளையூர், பங்குகளில் புதிய வடிவில் முழுவதும் காணொலி காட்சி வாயிலாக ரூத்து, 1சாமுவேல், 2சாமுவேல், 1அரசர், 2அரசர், யோசுவா, நீதித்தலைவர்கள் நூல்களிலிருந்து 15 சுற்றுக்களை கொண்ட வினாடி வினா போட்டி நடத்தித் தரப்பட்டது.

III. பள்ளி சந்திப்பு:

வல்லம், வாடியூர், சுரண்டை பங்குகளிலுள்ள பள்ளிகளில் மறைக்கல்வி, நல்லொழுக்கம் கற்கும் மாணவர்களையும், கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்களையும் உற்சாகப்படுத்தி அவர்களுக்கு மாதிரி வகுப்புகள் விவிலிய விளையாட்டுக்கள், கதைகள், பாடல்கள் வழியாக மறைக்கல்வி வகுப்புகள் இன்னும் உத்வேகம் பெற ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

IV. பங்கு பணிகள்:

1. காமநாயக்கன்பட்டி பங்கில் விவிலியப் போட்டிகள் நடத்த உதவி செய்யப்பட்டது.
2. பண்டாரக்குளம் பங்கில் விவிலியத் தேர்விற்கான வினாத்தாள்கள் தயாரித்து கொடுக்கப்பட்டது.
3. வீரவநல்லூர் பங்கில் திருவிவிலியத் திருவிழா போட்டிகளுக்கு வினாத்தாள்கள் மதிப்பீடு செய்து தரப்பட்டது.
4. கருத்தப்பிள்ளையூர் பங்கு பங்களா குடியிருப்பு கிளைக் கிராமத்தில் திருவிழா திருவழிபாட்டிற்கான தயாரிப்புப் பணிகள் செய்து கொடுக்கப்பட்டது.

அருட்பணி. ச. லூர்து மரிய சுதன்
செயலர்

ECCLESIASTICAL TRIBUNAL (October 2026)

The following matrimonial cases have been admitted to the process of nullity:

1. Paaulin Aarthi N (Jawaharnagar) **Vs** Vimal Singh S.V (Marthandam)
2. Cyril Samson T(Bangalore) **Vs** Grisha A (Palayamkottai)

Fr. Victor Raj
Judicial Vicar

This Month Collection

African Missions – For Missions in Africa – 01.11.2026
St. Peter the Apostle – To Support the Seminarians and Novices in Mission Countries Solemnity of Christ the King – 22.11.2026

Rev.Fr.C.Deepak Michael Raja, Procurator

அக்டோபர் மாத பணியறிக்கை

04.10.26 அன்று புனித வளனார் ஆலயத்தில் சங்கரன்கோவில் மறைவட்டத்திற்கான போதை ஒழிப்பு விழிப்புணர்வு - இளைஞருக்கான கருத்தமர்வு மற்றும் கலைப்போட்டிகள் நடைபெற்றன. இளைஞர்கள் வெவ்வேறு பங்குகளிலிருந்து வந்து பங்கேற்று பயனடைந்தனர். அனைத்து ஏற்பாடுகளையும் மறைமாவட்ட இளைஞர் இயக்க பணிக்குழுவினர் சிறப்பாக செய்திருந்தார்கள்.

11.10.26 அன்று போதை ஒழிப்பு விழிப்புணர்வு - இறுதி கலைப்போட்டி V.M. சத்திரம் புனித அந்தோணியார் CBSE பள்ளியில் சிறப்பாக நடைபெற்றது. மறைவட்ட அளவில் வெற்றிப்பெற்ற பங்குகள் இன்னும் அதிகமாக தங்களைத் தயாரித்து இறுதிப்போட்டியில் பங்கேற்றனர். ஏறக்குறைய 350 இளைஞர்கள் இவ்விழாவில் பங்கேற்று பயனடைந்தனர்.

இளைஞர் இயக்க சந்திப்பு:

18.10.26 அன்று குருவிகுளம் பங்கு இளைஞர் சந்திப்பு நடைப்பெற்றது.

25.10.26 அன்று சங்கர்நகர் பங்கில் இளைஞர்கள் சந்திக்கப்பட்டனர்.

இளம் கத்தோலிக்க மாணக்கர் இயக்கம் (YCS)/ இளம் மாணக்கர் இயக்கம் (YSM):

இளம் கத்தோலிக்க மாணக்கர் இயக்கம் (YCS)/ இளம் மாணக்கர் இயக்கத்தின் (YSM) வைரவிழா தொடக்கம் பொதுக்குழு மற்றும் நிர்வாகக் குழு தேர்வு 16.10.26 அன்று யூபிலி மேய்ப்புப் பணி நிலையம் சாந்திநகரில் நடைபெற்றது. இதில் 78 மாணக்கர்கள் மற்றும் வழிகாட்டி ஆசிரியர்கள் பங்கேற்று பயனடைந்தனர். முன்னாள் இ.க.மா இ.மா இயக்கத்தின் வழிகாட்டி ஆசிரியர் திரு.ஜெயமணி கருத்துரை வழங்கினார். தமிழ்நாடு கத்தோலிக்க இளைஞர் இயக்கத்தின் செயலர் அருட்பணி. ஜெனிபர் எடிசன் அவர்களின் சிறப்பான வழிநடத்துதலால் இ.க.மா / இ.மா இயக்க பொதுக்குழு மற்றும் நிர்வாகக் குழு தேர்வு நடைபெற்று புதிய பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பெயர்	*பொறுப்பு*	*பள்ளி/ இடம்*
எஸ்தர்	தலைவர்	புனித அந்தோணியார் மேல்நிலைப் பள்ளி கருத்தப்பிள்ளையூர்
சாய் சந்தீப்	துணை தலைவர்	புனித ஜோசப் மேல்நிலைப் பள்ளி கோவில்பட்டி
ஜான் எலிசா	செயலர்	திரு இருதய மேல்நிலைப் பள்ளி மேலஇலந்தைகுளம்
ஹன்னா. F. இருதயா	துணை செயலர்	குழந்தை இயேசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி பாளையங்கோட்டை
பால செண்பகம்	பொருளாளர்	தூய இஞ்ஞாசியர் கான்வெண்ட் மேல்நிலைப்பள்ளி, பாளையங்கோட்டை
வாசுதேவன்	ஆண்பகராளி	ஆர்.சி. பாத்திமா உயர்நிலைப்பள்ளி கயத்தார்
மகாலெட்சுமி	பெண்பகராளி	புனித அந்தோணியார் மேல்நிலைப் பள்ளி கருத்தப்பிள்ளையூர்
புனிதா	மறைமாவட்ட வழிகாட்டி ஆசிரியர்	புனித அந்தோணியார் மேல்நிலைப் பள்ளி கருத்தப்பிள்ளையூர்

பள்ளிகள் சந்திப்பு:

23.10.26 அன்று குழந்தை இயேசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் YCS/ YSM சந்திப்பு நடைப்பெற்றது.

26.10.26 அன்று பேட்டை, புனித அந்தோணியார் உயர்நிலைப் பள்ளியில் இளம் மாணக்கர் இயக்க சந்திப்பு நடைபெற்றது.

அருட்பணி. விக்டர் ராஜ் ம.
செயலர்

குடும்ப நலவாழ்வுப் பணிக்குழு

அக்டோபர் மாதப்பணியறிக்கை - 2026

1. திருமண முன்தயாரிப்பு பயிற்சி

ஆண்கள்	– 31 பேர்
பெண்கள்	– 37 பேர்
மொத்தம் பங்கேற்றவர்கள்	– 68 பேர்

2. திருமண தகவல் நிலையம்

பதிவு செய்தவர்கள்	– 30 பேர்
பார்வையிட்டவர்கள்	– 76 பேர்
திருமணம் ஏற்பாடாகியுள்ளோர்	– 21 பேர்

3. திருமண முன்தயாரிப்புப் பயிற்சி விபரம்

நவம்பர் 2026	06, 07.11.2026 முதல் வெள்ளி, சனி காலை 9 மணி முதல் மாலை 4.30 வரை 20, 21.11.2026 மூன்றாம் வெள்ளி, சனி காலை 9 மணி முதல் மாலை 4.30 வரை
டிசம்பர் 2026	04, 05.12.2026 முதல் வெள்ளி, சனி காலை 9 மணி முதல் மாலை 4.30 வரை 18, 19.12.2026 மூன்றாம் வெள்ளி, சனி காலை 9 மணி முதல் மாலை 4.30 வரை

அன்புடன்

அருட்பணி. ஜெமல்ஸ் ஜேம்ஸ்

செயலர்

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பணிக்குழு

பணியறிக்கை - அக்டோபர் 2026

12/10/2026 பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பணியகத்தின் தாளார்குளம் பங்கு மாலை நேர இணைக்கல்வி மையங்கள் முழுநேரப் பணியாளரால் சந்திக்கப்பட்டன. மாலை நேர வகுப்பில் மாணவ, மாணவியர், பெற்றோர், ஆசிரியர் சந்திப்பு கூட்டம் நடைபெற்றது. மாணவர்களின் கல்வி நிலை குறித்து கருத்து கேட்பு நடைபெற்றது. வகுப்பில் விடுப்பு எடுக்காமல் வருகை தந்த மாணவ, மாணவியருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. 3 இணைக்கல்வி ஆசிரியரின் கீழ் 35 மாணவ, மாணவியர்கள் கல்வி பயில்கின்றனர். வருகைப் பதிவேடு சரிபார்க்கப்பட்டது.

22/10/2026 சேர்ந்தமரம் பங்கு இணைக்கல்வி மையங்கள் முழுநேரப்பணியாளரால் சந்திக்கப்பட்டன. 4 இணைக்கல்வி ஆசிரியர்களின் கீழ் 70 மாணவ, மாணவியர் கல்வி பயில்கின்றனர். கிளைக்கிராமம் திருமலாபுரத்தில் 1 இணைக்கல்வி ஆசிரியரின் கீழ் 15 மாணவ, மாணவியர்கள் கல்வி பயில்கின்றனர். வருகைப் பதிவேடு சரிபார்க்கப்பட்டது.

23/10/2026 காமநாயக்கன்பட்டி இணைக்கல்வி மையங்கள் முழுநேரப் பணியாளரால் சந்திக்கப்பட்டன. 4 இணைக்கல்வி ஆசிரியரின் கீழ் 60 மாணவ மாணவியரும், கிளைப்பங்கு எட்டுநாயக்கன்பட்டியில் 3 இணைக்கல்வி ஆசிரியரின் கீழ் 40 மாணவ, மாணவியரும், கிளைப்பங்கு குருவிநத்தத்தில் 1 இணைக்கல்வி ஆசிரியரின் கீழ் 15 மாணவ, மாணவியரும் கல்வி பயில்கின்றனர். வருகைப் பதிவேடு சரிபார்க்கப்பட்டது. வடக்கு வண்டானம் பங்கு அச்சங்குளம் மாலை நேர இணைக்கல்வி மையங்கள் முழுநேரப் பணியாளரால் சந்திக்கப்பட்டன. 1 இணைக்கல்வி ஆசிரியரின் கீழ் 20 மாணவ மாணவியர்கள் கல்வி பயில்கின்றனர். வருகைப் பதிவேடு சரிபார்க்கப்பட்டது.

07/10/2026 அன்று வாடியூர் பங்கு இணைக்கல்வி மையங்கள் ஒருங்கிணைப்பாளரால் சந்திக்கப்பட்டன. கிளைக்கிராமம் மரியதாய்புரம் மற்றும் ஆனைகுளம் இணைக்கல்வி மையங்களும் சந்திக்கப்பட்டன.

ச. அருள் ஜார்ஜ் எட்வின்

செயலர்

தொழிலாளர் நலப்பணியகம்

பணியறிக்கை - அக்டோபர் 2026

04/10/26 கிறித்தவ தொழிலாளர் இயக்கம் சார்பாக நலவாரிய அட்டை முகாம் வடக்கு வண்டானம் பங்கு அச்சங்குளத்தில் நடைபெற்றது. இதில் 50 பேர் கலந்து கொண்டனர்.

18/10/26 காமநாயக்கன்பட்டி பங்கில் நடைபெற்ற மறைபரப்பு ஞாயிறு அன்று கிறித்தவ தொழிலாளர் இயக்கம் சார்பாக விளையாட்டுப் போட்டிகள் மற்றும் உணவு பகிர்வு நடைபெற்றது.

12/10/26 அன்று தாளார்குளம் பங்கில் உள்ள தையல் மற்றும் பீடி சுற்றும் தொழிலாளர் கூட்டம் நடைபெற்றது. நலவாரிய அட்டை முகாம் நடத்துவது குறித்து கலந்தாலோசிக்கப்பட்டது.

செயலர்

அருட்பணி. அருள் ஜார்து எட்வின்

PARISH MONTHLY COLLECTION (MAY TO SEPTEMBER – 2026)

S.No	Parish Name	Vocation Sunday May'2026	Peter's Pence June' 2026	Communication Sunday July'2026	Prison Ministry August' 2026	Bible Sunday Sep' 2026
1	Agarakattu	4,310.00	4,310.00	-	-	-
2	Alangulam	2,000.00	2,000.00	2,000.00	2,000.00	2,000.00
3	Alavanthankulam	3,000.00	3,000.00	3,000.00	3,000.00	3,000.00
4	Ambasamuthuram	4,300.00	5,500.00	5,300.00	4,900.00	-
5	Avudayanoor	3,320.00	3,245.00	-	-	-
6	Cheranmahadevi	6,368.00	5,704.00	6,197.00	6,313.00	5,768.00
7	Chidambarapuram	1,575.00	1,600.00	1,780.00	4,000.00	-
8	Duraisamypuram	1,000.00	1,100.00	1,000.00	1,350.00	-
9	Ilayarasanendal	-	-	-	-	-
10	Iruthayakulam	4,200.00	4,100.00	4,250.00	4,150.00	4,200.00
11	Iruthayanagar	-	-	-	-	-
12	Jawaharnagar	22,253.00	23,793.00	26,004.00	21,422.00	23,904.00
13	Kadayam	2,000.00	1,600.00	1,500.00	2,000.00	2,000.00
14	Kallidaikurichy	-	-	-	-	-
15	Kalugumalai	5,100.00	-	-	-	-
16	Kamanayakanpatti	9,530.00	9,510.00	8,100.00	12,100.00	8,500.00
17	Karuthapillaiyur	2,530.00	2,300.00	2,400.00	2,475.00	-
18	Kayathar	2,800.00	2,500.00	2,400.00	3,050.00	2,460.00

19	Kovilpatti	10,000.00	10,000.00	10,000.00	10,000.00	10,000.00
20	Kuruvikulam	3,000.00	1,636.00	1,417.00	1,705.00	
21	KTC Nagar	3,500.00	3,500.00	3,500.00	3,500.00	3,500.00
22	Maharajanagar	6,325.00	7,870.00	7,358.00		
23	Melailandaikulam	1,100.00	1,400.00	1,200.00	1,400.00	1,400.00
24	MelaMeignanapuram	-	-	-	-	-
25	Nallatinputhur	2,550.00	2,470.00	1,830.00	1,920.00	2,690.00
26	Nettur	1,000.00	1,000.00	1,000.00	1,000.00	1,000.00
27	Palayamchettikulam	930.00	-	-	-	-
28	Palayamkottai	35,506.00	34,767.00	36,945.00	32,673.00	35,339.00
29	Pandarakulam	1,575.00	1,500.00	1,915.00	1,720.00	1,880.00
30	Pavoorchatram	4,489.00	3,869.00	5,223.00	7,089.00	-
31	Pettai	4,793.00	-	-	-	-
32	Puliankudi	2,900.00	3,330.00	3,310.00	-	-
33	Puliampatti	7,063.00	9,560.00	7,610.00	5,650.00	8,335.00
34	Sankarankoil	790.00	900.00	900.00	-	-
35	Sankarnagar	2,400.00	2,160.00	-	-	-
36	Sendamaram	3,285.00	3,665.00	2,928.00	2,734.00	3,194.00
37	Shanthinagar	2,000.00	2,000.00	2,000.00	2,000.00	2,000.00
38	Singamparai	4,300.00	4,500.00	4,600.00	4,300.00	4,500.00
39	Surandai	1,950.00	-	-	-	-
40	Tirunelveli Town	-	-	-	-	-
41	Tenkasi	10,045.00	9,000.00	9,500.00	10,000.00	10,320.00
42	Uthumalai	1,160.00	1,630.00	2,030.00	2,250.00	
43	Vadiyoor	2,500.00	3,000.00	2,800.00	2,800.00	2,700.00
44	Vandanam	578.00	594.00	552.00	588.00	602.00
45	Veeravanallur	3,000.00	3,300.00	3,100.00	3,100.00	3,200.00
46	Velayuthapuram	1,500.00	2,900.00	2,300.00	1,800.00	1,800.00
47	Venkatachalapuram	2,430.00	2,850.00	-	-	-
48	Vickramasingapuram	5,000.00	5,000.00	5,000.00	5,000.00	5,000.00
49	Xavier Colony	4,215.00	3,591.00	3,510.00	4,151.00	3,530.00
50	Thalarkulam	2,500.00	2,034.00	2,074.00	2,034.00	2,600.00
51	Nalamkattalai	820.00	820.00	820.00	610.00	-
52	Kalvettankuli	1,500.00	1,500.00	1,500.00	1,500.00	1,500.00
53	Shencottai	1,000.00	1,000.00	1,000.00	846.00	-
54	Vallam	-	-	-	-	-
55	Vaikalipatti	1,490.00	1,750.00	1,895.00	1,877.00	1,709.00
56	Sivagiri	1,876.00	1,650.00	1,853.00	1,713.00	-
57	Rengasamuthiram	537.00	808.00	806.00	843.00	-
58	Kammapatty	-	-	-	-	-
59	Thannuthu	1,600.00	1,520.00	1,510.00	1,650.00	1,780.00
60	Arockianathapuram	1,500.00	1,500.00	1,500.00	1,500.00	1,500.00
	Total	2,16,993.00	2,08,836.00	1,97,417.00	1,84,713.00	1,61,911.00

Parish & Shrine Contribution to the Diocese

Sl. No.	Parish Name	May'2026	June'2026	July'2026	Aug'2026	Sep'2026	Oct'2026
1	Diocesan Shrine	1,25,000.00	1,25,000.00	1,25,000.00	1,25,000.00	1,25,000.00	-
2	Irudayakulam	-	-	-	-	-	-
3	Irudayanagar	5,000.00	5,000.00	5,000.00	5,000.00	5,000.00	5,000.00
4	Jawaharnagar	25,000.00	25,000.00	25,000.00	25,000.00	25,000.00	-
5	Kallidaikurichi	30,000.00	30,000.00	-	-	-	-
6	Kalvettankuzhi	15,000.00	15,000.00	15,000.00	15,000.00	15,000.00	-
7	Kamanayakkanpatti	25,000.00	25,000.00	25,000.00	25,000.00	25,000.00	25,000.00
8	Kovilpatti	25,000.00	25,000.00	25,000.00	25,000.00	25,000.00	25,000.00
9	Palayamkottai	25,000.00	25,000.00	25,000.00	25,000.00	25,000.00	-
10	Puliampatti	2,50,000.00	2,50,000.00	2,50,000.00	2,50,000.00	2,50,000.00	2,50,000.00
11	Shanthinagar	15,000.00	15,000.00	15,000.00	15,000.00	15,000.00	-
12	Singamparai	10,000.00	10,000.00	10,000.00	10,000.00	10,000.00	-
13	Tenkasi	50,000.00	50,000.00	50,000.00	50,000.00	50,000.00	-
14	Venkatachalapuram	5,000.00	5,000.00	-	-	-	-
15	Xavier Colony	10,000.00	10,000.00	10,000.00	10,000.00	10,000.00	-

ஆயரின் நல நிதிகள்

அக்டோபர் - 2026

குரு மாணவர் நல நிதி	
MR. MERLEYJACOBALEXA	10,000.00
திரு. ஜாண் பிரிட்டோ	6,000.00
பாளையங்கோட்டை இறைமக்கள்	5,000.00
கே.டி.சி நகர் இறைமக்கள்	3,000.00
ஓடைமறிச்சான் இறைமக்கள்	2,500.00
திருநெல்வேலி டவுண் இறைமக்கள்	2,500.00
எட்டுநாயக்கன்பட்டி இறைமக்கள்	2,000.00
திருமதி. மரியசெல்வமேரி	2,000.00
வல்லம் இறைமக்கள்	1,500.00
ஜவஹர்நகர் இறைமக்கள்	1,200.00
ஆரோக்கியநாதபுரம் இறைமக்கள்	1,000.00
தென்காசி இறைமக்கள்	1,000.00
திருமதி. எலிசபெத் பிலிப், பாளையங்கோட்டை	500.00
திருமதி. ரோசரி, சேரன்மகாதேவி	500.00
மொத்த இருப்புத்தொகை	38,700.00
இம்மாதம் வழங்கியது	**38,700.00**
ஏழை மாணவர் கல்வி நிதி	
முன் கையிருப்பு	6,437.00
மறைமாவட்ட நிதி	33,563.00
மொத்த இருப்புத்தொகை	40,000.00
இம்மாதம் வழங்கியது	**40,000.00**
குடும்ப நல நிதி	
மொத்த இருப்புத்தொகை	**3,68,557.00**
மருத்துவ நல நிதி	
முன் கையிருப்பு	2,896.00
மறைமாவட்ட நிதி	7,104.00
மொத்த இருப்புத்தொகை	10,000.00
இம்மாதம் வழங்கியது	**10,000.00**
நற்செய்திப் பணி நிதி	
முன் கையிருப்பு	3,81,870.00
திருமதி. ரோசரி, சேரன்மகாதேவி	500.00
மொத்த இருப்புத்தொகை	**3,82,370.00**

BISHOP EMERITUS JUDE PAULRAJ'S ENGAGEMENTS

November - 2026


Date	Time	Programme
02.11.2026	05.00 P.M.	Mass, NGO Colony
06.11.2026	07.00 P.M.	Mass, SHJ Generalate Chapel
07.11.2026	03.30 P.M.	First Death Anniversary Mass, Kovalam
11.11.2026	09.00 A.M.	Wedding Mass, Cathedral
14.11.2026	10.00 A.M.	Wedding Mass, Gnanaolivupuram
16.11.2026	11.00 A.M.	Wedding Mass, Salem
20.11.2026	11.30 A.M.	Wedding Mass, EB Colony
22.11.2026	11.00 A.M.	Wedding Mass, Lyuns Town
26.11.2026	10.00 A.M.	Mass for SHJ Aspirants, Irudayakulam
27.11.2026	05.30 P.M.	Annual Day Celebration, St.Jude Public School, Aalanchi

+ Jude



All Saints' Day
01.11.2026

All Souls' Day
02.11.2026



For Private Circulation only
Edited & Published by
REV. FR. XAVIER DEVASAGAYAM
CHANCELLOR, CATHOLIC BISHOP'S HOUSE, P.B.No. 108, PALAYAMKOTTAI-2
e-mail : chancellor@palayamkottaidiocese.org
Web : www.palayamkottaidiocese.org



This document was created with the Win2PDF “Print to PDF” printer available at

https://www.win2pdf.com

This version of Win2PDF 10 is for evaluation and non-commercial use only.
Visit https://www.win2pdf.com/trial/ for a 30 day trial license.

This page will not be added after purchasing Win2PDF.

https://www.win2pdf.com/purchase/